சொன்னார்கள். 30 வயதுக்கு உட்பட்ட விதவைகளைப் பொறுத்தவரையில் அல்லது கணவனால் கைவிடப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தவறு செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உதவித் தொகை அளிக்கிற திட்டமே இருக்கிறது. எனவே தவறு செய்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு இருப்பதன் காரணத்தால் அவர்கள் கணவனால் கைவிடப் பட்டவர்கள் என்பதைப் பொறுத்தவரையில், மக்களிடத்திலே தொடர்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு சர்ட்டிஃபிக்கேட் கொடுத்தால், அதை வைத்து அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கிற திட்டத்தை அரசு ஏற்படுத்துமா? அந்த வகையில் பரிசிலனையில் இல்லை என்றாலும், இனிமே லாவது அதனை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கபடுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்டவர்களும், விதவைகளும் தவறுகள் செய்யக்கூடாது என்ற அளவுக்குத்தான் அரசு இன்றைக்கு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கிற வகையில் உதவித் தொகைகளை அளிக்கிறது. அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்கிற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சான்றிதழ் கொடுத்தால் உதவித் தொகை கொடுப்பதற்குரிய வகையில் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இவர்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள்தான் என்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊட்டச்சத்து திட்டத்துக்கு உலக வங்கி உதவி.

623—(*வினா எண். 4549) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

உலக வங்கி அளித்துவரும் ஊட்டச்சத்து உதவி எதுவரை கிடைக்கும்?

1986 மே 3]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்திற்கு உலக வங்கி அளித்து வரும் உதவி 30—6—1986 வரை கிடைக்கும்.

சென்னையில் மகளிர் விடுதிகள்.

624—(*வினா எண். 6894) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் சமூக நலத் துறையால் மகளிர் தங்குவதற்கு மேலும் விடுதிகள் கட்டுவதற்கு அரசு பரிசீலித்து வருகிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: இல்லை.

(முற்பகல் 10-00.)

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிட்டார்கள். பரவாயில்லை. சென்னையில் சமூக நலத் துறையால் நடத்தப்படும் மகளிர் தங்கும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த விடுதிகளில் எத்தனை பெண்கள் வசிக்கிறார்கள் என்பதையும், சென்னையில் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த தனியார் விடுதிகளுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பணிபுரியும் மகளிருக்காக 2 விடுதிகள் சமூக நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலும், கிண்டியிலும் அந்த விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலே 35 அங்கத்தினர்களும், கிண்டியில் 50 அங்கத்தினர்களும் தங்கி இன்றைக்கு அந்த வசதிகளை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிறுவனங்கள் எவ்வளவு என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக இயங்கும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் 10 சென்னையில் இருக்கின்றன. (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது).